TAMILTH Kancheepuram 1 Regional_01 21_29_01

சென்னையில் பரவும் மர்ம காய்ச்சல் மக்கள் அச்சமடைய வேண்டாம் அரசு மருத்துவமனை டீன் தகவல்

● சென்னை

சென்னையில் கடந்த சில நாட்களாக காய்ச்சல் பாதிப்பு அதிகரித்து வருகிறது. கொசு தொல்லையும் அதிகரித்துள்ளது. இதனால் பொதுமக்கள் மத்தியில் அச்சம் நிலவியுள்ளது.

இதுகுறித்து சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை டீன் தேரணிராஜன் கூறியதாவது: ஒவ்வோர் ஆண்டும் ஏற்படும் தட்பவெப்ப நிலை மாற்றம் காரணமாக வைரஸ்கள் தங்களது நிலையை மாற்றிக்கொள்வதால்தான் இத்தகைய காய்ச்சல் பாதிப்பு ஏற்படுகிறது. ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் தினமும் 12 ஆயிரம் புறநோயாளிகள் வந்தாலும் கூட காய்ச்சல் பாதிப்புகளால் வருவோரின் எண்ணிக்கை குறைவாகத்தான் இருக்கிறது. இது சாதாரணமான ஃப்ளு காய்ச்சலுக்கான அறிகுறியாகதான் இருக்கிறது.

காய்ச்சல் பாதிப்பால் வருவோருக்கு கரோனா பரிசோதனை மேற்கொண்டாலும், தொற்று எதுவும் அவர்களுக்கு இல்லை.

உடல்நிலை சரியில்லாத குழந்தைகளை மருந்து, மாத்திரை கொடுத்து பள்ளிக்கு அனுப்ப வேண்டாம். பொதுமக்கள் யாரும் இத்தகைய காய்ச்சல் பாதிப்பு குறித்து பயப்பட வேண்டாம். மருத்துவரின் ஆலோசனை பேரில் மட்டுமே மருந்துகளை உட்கொள்ள வேண்டும். மூச்சு விடும் எண்ணிக்கை அதிகமாலும், நினைவாற்றல் குறையும்போதும், இடைவிடாத காய்ச்சல் போன்ற நேரங்களில் மட்டும் அவசியம் மருத்துவரை அணுக வேண்டும் என்று அவர் கூறினார்.

சென்னையில் 65 வழித்தடங்களில் மட்டுமே

தாழ்தள பேருந்துகளை இயக்க முடியும்

உயர் நீதிமன்றத்தில் அரசு போக்குவரத்துக்கழகம் பதில் மனு

● சென்னை

சென்னையில் 65 வழித்தடங்கள் மட்டுமே தாழ்தளப் பேருந்துகளை இயக்க சாத்தியமானவை என மாநகர அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு ஆயிரத்து 107 பேருந்துகளை புதிதாக கொள்முதல் செய்யும் டெண்டரில் மாற்றுத் திறனாளிகளுக்கு பயனளிக்கும் வகையில் தாழ்தளப் பேருந்துகளை கொள்முதல் செய்ய உத்தரவிடக்கோரி வைஷ்ணவி ஜெயக்குமார் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கை ஏற்கெனவே விசாரித்த பொறுப்பு தலைமை நீதிபதி டி.ராஜா தலைமையிலான அமர்வு, சென்னை மாநகரில் தாழ்தளப் பேருந்துகளை இயக்க சாத்தியமான வழித்தடங்கள் குறித்து அறிக்கை தாக்கல் செய்ய மாநகர அரசுப் போக்குவரத்துக் கழகத்துக்கு உத்தரவிட்டிருந்தது.

> மாநகர போக்குவரத்து கழகம் சார்பில் 130 கிராமங்களில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன

இந்நிலையில் இந்த வழக்கு பொறுப்பு தலைமை நீதிபதி டி.ராஜா மற்றும் நீதிபதி டி.பரத சக்ரவர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது போக்குவரத்துக் கழகம் சார்பில் கூடுதல் அரசு தலைமை வழக்கறிஞர் ஜெ.ரவீந்திரன் ஆஜராகி பதில் மனுவை தாக்கல் செய்தார்.

அதில், சென்னை மாநகர அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் 130 கிராம வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. அந்த சாலைகள் குறுகலாக இருப்பதால் அவற்றில் தாழ்தளப் பேருந்துகளை இயக்க முடியாது. அதேபோல சென்னையில் உள்ள சுரங்கப்பாதைகள் வழியாக 173 வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. அந்த வழித்தடங்களில் தாழ்தளப் பேருந்துகளை இயக்கினால் மழை காலங்களில் மழைநீர் பேருந்துகளின் உள்ளே புகுந்து விடும். இதேபோல மினி பேருந்துகள் இயக்கப்படும் 74 வழித்தடங்களிலும், மெட்ரோ பணிகள் நடைபெற்று வரும் 186 வழித்தடங்களிலும் தாழ்தளப் பேருந்துகளை இயக்குவது சாத்தியமற்றது. தற்போதைய சூழலில் சென்னை மாநகரில் 65 வழித்தடங்கள் மட்டுமே தாழ்தளப் பேருந்துகளை இயக்க சாத்தியமானவை. இதற்காக 342 தாழ்தளப் பேருந்துகளை கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது என அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதையடுத்து நீதிபதிகள், இது குறித்து மனுதாரர்கள் தரப்பையும் இணைத்து ஆய்வு நடத்தி மீண்டும் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டுமென அரசு தரப்புக்கு உத்தரவிட்டு விசாரணையை வரும் பிப்.20-க்கு தள்ளிவைத்தனர்.

19 மண்டல அலுவலகங்களில் நாளை குடும்ப அட்டை குறைதீர் முகாம்

● சென்னை

சென்னையில் உள்ள 19 மண்டல உதவி ஆணையர் அலுவலகங்களில் குடும்ப அட்டை குறைதீர் முகாம் நாளை (பிப்.11) நடைபெறுகிறது.

இதுகுறித்து உணவுப்பொருள் வழங்கல் துறை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

பொது விநியோகத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் சேவைகளை குடிமக்கள் எளிதில் பெறும் வகையில் தமிழகம் முழுவதும் ஒவ்வொரு வட்டத்திலும் மக்கள் குறைதீர் முகாம் மாதந்தோறும் நடத்தப்படுகிறது.

அதன்படி, பிப்ரவரி மாதத்துக்கான மாதாந்திர பொது விநியோகத் திட்ட மக்கள் குறைதீர் முகாம் சென்னையில் உள்ள 19 மண்டல உதவி ஆணையர் அலுவலகங்களில் நாளை (பிப்.11) காலை 10 மணிமுதல் பிற்பகல் 1 மணிவரை நடைபெறவுள்ளது.

குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்கம், முகவரி மாற்றம், கைப்பேசி எண் பதிவு, மாற்றம் செய்தல் மற்றும் புதிய குடும்ப அட்டை, நகல் குடும்ப அட்டை கோரும் மனுக்களைப் பதிவு செய்தல் ஆகிய சேவைகள் மேற்கொள்ளப்படும். மேலும், நியாய விலைக் கடைகளில் பொருள் பெற நேரில் வர இயலாத மூத்த குடிமக்கள் உள்ளிட்டோருக்கு அங்கீகாரச் சான்றும் வழங்கப்படும்.

இதுதவிர, பொது விநியோகக் கடைகளின் செயல்பாடுகள், தனியார் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகளில் குறைபாடுகள் குறித்த புகார்கள் ஏதேனும் இருப்பின் அவற்றைப் பொதுமக்கள் இம்முகாமில் தெரிவித்தால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சென்னையிலுள்ள 19 மண்டல அலுவலகம் தொடர்புடைய பகுதிகளில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் இந்த சேவையைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

சென்னை கடற்கரை-எழும்பூர் 4-வது பாதை திட்டம்

2023-24 நிதியாண்டில் ரூ.97 கோடி நிதி ஒதுக்கீடு

திட்டத்தை துரிதமாக செயல்படுத்த பொதுமக்கள் கோரிக்கை

மு.வேல்சங்கர்

● சென்னை

சென்னை கடற்கரை-எழும்பூர் (4.3 கி.மீ.) 4-வது பாதை அமைக்கும் திட்டத்துக்கு 2023-24-ம் நிதியாண்டில் ரூ.96.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால், பணிகளை வேகமாக செயல்படுத்த நடவடிக்கை எடுக்க பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சென்னையில் மிக முக்கியமான புறநகர ரயில் வழித்தடமாக தாம்பரம்-சென்னை கடற்கரை வழித்தடம் உள்ளது. இந்த வழித்தடத்தில் சென்னை கடற்கரை மற்றும் எழும்பூர் இடையே 3 பாதைகள் மட்டுமே உள்ளன. இவற்றில் 2 பாதைகளில் புறநகர் மின்சார ரயில்கள் இயக்கப்படுகின்றன. ஒரு பாதையில் விரைவு ரயில்கள் அல்லது சரக்கு ரயில்கள் இயக்கப்படுகின்றன. 4-வது ரயில் பாதை இல்லாத காரணத்தால், கூடுதல் ரயில்கள் இயக்கவோ அல்லது சரக்கு ரயில்களை குறிப்பிட்ட நேரத்தில் இயக்கவோ இயலாத நிலை உள்ளது. இதுதவிர, வடமாநிலங்களுக்குச் செல்லும் ரயில்கள் பெரும்பாலும் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து இயக்கப்படுவதால், சென்ட்ரல் ரயில் நிலையம் எப்போதும் கூட்டம் நிரம்பி வழிகிறது. இங்கு கூட்டத்தைக் குறைக்கும் நோக்கில், தாம்பரத்திலிருந்து எழும்பூர் ரயில் நிலையம் வழியாக வட மாநிலங்களுக்கு ரயில்கள் இயக்க புதிய பாதை தேவைப்படுகிறது.

எனவே, சென்னை கடற்கரை-எழும்பூர் இடையே 4-வது பாதைஅமைக்கப் பயணிகள் நெடுங்காலமாகக் கோரிக்கை வைத்து வந்தனர். இக்கோரிக்கையை ஏற்று, சென்னை கடற்கரை-எழும்பூர் இடையே 4.3 கி.மீ. தொலைவுக்கு 4-வது புதிய பாதை அமைக்க ரயில்வே வாரியத்துக்கு தெற்கு ரயில்வே பரிந்துரை செய்தது. மேலும், ரூ.300 கோடியில் திட்ட மதிப்பீடு செய்து புதிய பாதைக்கு மண் பரிசோதனைகள் முடிக்கப்பட்டு, கடந்த 2 ஆண்டுக்கு முன்பு அனுப்பிவைக்கப்பட்டது. இதற்கு ரயில்வே வாரியம் ஒப்புதல் அளித்தது. இருப்பினும், நிலம் கையகப்படுத்துவதில் சிக்கல் காரணமாக, பணிகள் தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், சென்னை கடற்கரை-எழும்பூர் 4-வது பாதை அமைக்கும் திட்டத்துக்கு மத்திய பட்ஜெட்டில் ரூ.96.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு நிதி ஒதுக்கீட்டை விட தற்போது நிதி ஒதுக்கீடு அதிகரித்துள்ளதால், இத்திட்டத்தை துரிதமாக செயல்படுத்த வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து மடிப்பாக்கத்தைச் சேர்ந்த சமூக ஆர்வலர் வரதன் அனந்தப்பன் கூறும்போது, "சென்னை கடற்கரை-எழும்பூர் 4-வது பாதை அமைக்கப் பல ஆண்டுகளாக வலியுறுத்தி வருகிறோம். இந்த ஆண்டு மத்திய பட்ஜெட்டில் ரூ.96.70 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, நிலத்தைக் கையகப்படுத்தும் பணியை விரைவாக முடித்து, திட்டப் பணியைத் தொடங்க வேண்டும்" என்றார்.

தெற்கு ரயில்வே அதிகாரி ஒருவர் கூறும்போது, "சென்னை கடற்கரை-எழும்பூர் இடையே மின்மயமாக்கலுடன் 4-வது திட்டத்தை நிறைவேற்ற நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெறுகிறது. இத்திட்டத்தில் கூவம் ஆறு பகுதியில் பாதை அமைப்பது மிகப்பெரிய சவாலாக இருக்கும். சென்னை கடற்கரை-எழும்பூர் இடையே 4-வது பாதை அமைக்கும் திட்டத்தை நிறைவேற்ற பாதுகாப்புத் துறை, ரிசர்வ் வங்கியிடம் நிலத்தைப் பெற வேண்டியுள்ளது. இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. பாதுகாப்புத் துறையுடன் பேச்சுவார்த்தை சுமுகமாக முடிந்துள்ளது. ரிசர்வ் வங்கியிடம் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. விரைவில் நல்ல முடிவு கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம்" என்றார்.

திட்ட மதிப்பீடு ரூ.274.20 கோடி

சென்னை கடற்கரை-எழும்பூர் இடையே 4-வது பாதை அமைக்கும் திட்டத்துக்கு ரூ.274.20 கோடி திட்ட மதிப்பீடு செய்யப்பட்டது. இந்த திட்டத்துக்கு 2020-21-ம் நிதியாண்டில் நிதி ஒதுக்கவில்லை. இதன்பிறகு, 2021-22-ல் ரூ.5 கோடியும், 2022-23-ல் ரூ.54 கோடியும் நிதி ஒதுக்கப்பட்டது. 2023-24-ம் நிதியாண்டுக்கு ரூ.96.70 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

சென்னை ஜசிஸப் ரயில்வே கேட் 2 – கொளத்தூர் பகுதியை இணைக்கும் வகையில் மேம்பாலம் அமைக்கும் பணிகள் தொடங்கி 3 ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் பணிகள் நிறைவு பெறாமல் உள்ளன. தற்போது மீண்டும் பாலம் அமைக்கும் பணிகள் தொடங்கியுள்ளதால், விரைவில் பணிகளை முடித்து பாலம் திறக்கப்பட வேண்டும் என்பதே பொதுமக்களின் கோரிக்கையாக உள்ளது. படம்: ம.பிரபு

போதையில் தகராறு செய்ததை தட்டிக்கேட்ட

தாயை அடித்து கொன்ற மகன் கைது

● சென்னை

மது போதையில் தகராறு செய்த மகனை தட்டிக்கேட்ட தாயை பீர் பாட்டிலால் அடித்துக் கொலை செய்த மகன் கைது செய்யப்பட்டுள்ளார்.

வியாசர்பாடி சாந்தி நகர், 11-வது தெருவைச் சேர்ந்தவர் கண்ணகி(40). இவரது மகன் அஜய்(21). பெயின்டர் வேலை செய்து வருகிறார். இவர் மகா சிவராத்திரிக்காக மாலையணிந்துள்ளார். அஜய் நேற்று முன்தினம் அதிகாலை மது போதையில் வீட்டில் சத்தம் போட்டுக் கொண்டே நடனமாடியுள்ளார். இதுதொடர்பாக அக்கம்பக்கத்தினர் கண்ணகியிடம் புகார் தெரிவித்தனர்.

இதையடுத்து கண்ணகி, மகன் அஜய்யிடம் ஏன் சத்தம் போடுகிறாய்? மாலை அணிந்து கொண்டு மது அருந்தலாமா? என கண்டித்துள்ளார். இதனால் இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. ஆத்திரம் அடைந்த அஜய், பீர் பாட்டிலால் கண்ணகியின் தலையில் ஓங்கி அடித்துள்ளார். இதில், கண்ணகி பலத்த காயம் அடைந்தார். அவரின் அலறல் சத்தம் கேட்டுஅங்குவந்த அக்கம்பக்கத்தினர், கண்ணகியை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்த்தனர். இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு உயிரிழந்தார்.

இதுகுறித்து எம்கேபி நகர் போலீஸார் வழக்குப் பதிந்து தாயை கொலை செய்ததாக அஜய்யை கைது செய்தனர். பின்னர், அவரை நீதிமன்ற காவலில் புழல் சிறையில் அடைத்தனர்.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

தமிழகத்தில் 9 பேருக்கு கரோனா தொற்று

● சென்னை

தமிழகத்தில் நேற்று 9 பேருக்கு கரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் இதுவரை 6 கோடியே 91 லட்சத்து 11 ஆயிரத்து 684 பேருக்கு கரோனா பரிசோதனை செய்யப்பட்டதில், 35 லட்சத்து 94 ஆயிரத்து 708 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கரோனா தொற்றுக்கு நேற்று உயிரிழப்பு ஏதும் இல்லை. தற்போது 40 பேர் சிகிச்சையில் உள்ளனர். 5 பேர் கரோனாவில் இருந்து குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர்.

வரி விளம்பரங்கள்

சுய செய்தி

பெயர்மாற்றம்

I, Samadanam Abraham S/O Mr. Samadanam born on 24/2/1954 residing at Plot No. 30, New No. 19, Devar street backside, Sakthi Nagar, Thandurai, Pattabiram, Chennai 600072. I declare that the names Abraham S, Samadanam Abraham and S Abraham all refer to me, vide affidavit dated 23/1/2023 at Chennai.

பொது

பொது அறிவிப்பு

In the court of IV Addl. Senior Civil Judge Bangalore Rural District at Bengaluru

O.S No.986/2015

BETWEEN:
Sri. R.PUTTAIAH ...PLAINTIFF
AND: **Sri.S.RAMAIAH**
AND OTHERS ...DEFENDANTS

NOTICE TO PROPOSED DEFENDANTS No.6,8,9,10

I, Sri R Puttaiah s/o Late Ramaiah, Aged about 82 years, residing at No.93, Magadi Main Road, Kamakshipalya, Bengaluru, Do hereby solemnly affirm and state as follows:
1) Sri R Manjunatha, S/o Late Rama krishnappa, Aged about 46 years, residing at No.66/49, Garuda charpalya main road,Opp. Anjaneya Temple, Bangalore-560048.
2) Sri. Rikap Kumar Chordia, S/o Late Mangilal Chordia, Aged about 47 years, residing at No.12, Letanga Road, Verpery, Chennai-600007
3) Sri R Santhosh Kumar ,S/o Sri Ram Avathar Shaw, Aged about 36 years, residing at Shanthi Bhavan, Venkate-shwara Theater Road, Devansandra, KR Puram, Bengaluru-560036
4) Sri B V Jayaram, S/o Vankatagiri Gowda, Aged about 48 years, residing at No.297, Behind Canara Bank, Begur Village, Bangalore- 560068
The above said proposed defendants 1 to 4 are the correct address of the proposed defendants 6,8,9 and 10 .

Whereas the plaintiff herein has filed the above suit against the defendants for Specific Performance of the agreement of sale and during subsistence of the agreement of sale and the plaintiff came to know through credible information that , the proposed defendants 6,8,9 and 10 to deprive the legitimate right of the plaintiff the said proposed defendants allegedly purchased the portion of the schedule property from the defendants 1 to 5 by knowing fully well that , the suit is pending filed by the plaintiff against the defendants 1 to 5 . Therefore, this Honourable Court directed the plaintiff to take notice to the proposed defendants 6,8,9 and 10 in the above said case, the proposed defendants are hereby notified to appear before this court next hearing date 24/03/2023.

SCHEDULE PROPERTY

All that piece and parcel of the agricultural land bearing Sy No .10 measuring 2 acres , situated in Bandapura village,Bidarahalli Hobli, Bangalore East Taluk and bounded on the East BY: property of Smt. R Shakunthala in Sy No 11, West by: Remaining portion of the land in Sy No 10, North by: Property of Sri Anjanappa, South by : Property of Sri.Anjanappa.

Given under the hand and seal of this IVth ADDL. SENIOR CIVIL JUDGE, BANGALORE RURAL DISTRICT AT BENGALURU ON 06/02/2023 at 11 A.M.

BY ORDER OF THE COURT,
CHIEF MINISTERIAL OFFICE,
Senior Civil Judge's Court,
Bangalore Rural Dist. Bangalore

படிவம் B
பொது அறிவிப்பு
(திவாலா நிலை மற்றும் திவால்நிலை போர்ட் ஆப் இந்தியா (கலைப்பு செயல்முறை) விதிமுறைகள், 2016-ன் ஒழுங்குமுறை 12-ன்கீழ்)

M/s. சுப்ரீம் கோட்டட் போர்ட் மில்ஸ் பிரைவேட் லிமிடெட் பங்குதாரர்களின் கவனத்திற்கு

வ. எண்.	குறிப்பு	விபரங்கள்
1.	நிறுவன கடனாளர் பெயர்	**M/s. சுப்ரீம் கோட்டட் போர்ட் மில்ஸ் பிரைவேட் லிமிடெட்**
2.	நிறுவன கடனாளர் இணைந்த தேதி	30.06.2003
3.	நிறுவன கடனாளரை இணைத்த/ பதிவு செய்த அதிகாரி	ஆர்.ஒ.சி - சென்னை
4.	நிறுவன கடனாளரின் கார்ப்பரேட் அடையாள எண்/குறுகிய பொறுப்பு அடையாள எண்.	U21022TN2003PTC051112
5.	நிறுவன கடனாளரின் பதிவு மற்றும் பிரின்ஸ்பல் அலுவலகம் (ஏதேனும் இருப்பின்) முகவரி	மனை எண்.30, தரைதளம், ஆர்சிசி கட்டிடம், புதிய ஸ்டார் சிட்டி, பயசாம்பாக்கம், சென்னை தமிழ்நாடு 600052.
6.	நிறுவன கடனாளரின் திவால் தன்மை துவங்கிய நாள்	07.02.2023
7.	நிறுவன கடனாளரின் விருப்ப கருத்துரு அழைப்பு தேதி	07.02.2023
8.	நொடிந்தவர்க்காக செயல்படும் தீர்மாண நிபுணரின் பெயர் மற்றும் பதிவு எண்.	**ராஜலஷ்மி வரதராஜன்** IBBI/IPA-003/IP-N00145/2017-2018/11597
9.	வாரியத்தில் பதிவுசெய்யப்பட்ட தீர்மாண நிபுணரின் முகவரி மற்றும் Email முகவரி	3/6, வெங்கடேஸ்வரா காலனி, 10வது தெரு, கொடுங்கையூர், சென்னை - 600118. E-mail: cma.rajalakshmi@gmail.com
10.	தீர்மான நிபுணருடன் கடித பரிமாற்றத்திற்கான முகவரி மற்றும் Email முகவரி	**3/6, வெங்கடேஸ்வரா காலனி, 10வது தெரு, மாதவரம் மில்க் காலனி, சென்னை 600051 E-mail: liq.scbmpl@gmail.com**
11.	கிளைம்கள் சமர்ப்பிக்கும் கடைசி தேதி	08.03.2023

தேசிய கம்பெனி சட்ட தீர்ப்பாயம் டிவிஷன் (சென்னை பெஞ்ச்) உத்தரவின்படி M/s.சுப்ரீம் கோட்டட் போர்ட் பிரைவேட் லிமிடெட்-ன் கலைப்பிற்கான செயல்முறைகள் கோட் பிரிவு 33-ன்கீழ் 07.02.2023 அன்று ஆரம்பிக்க உத்தரவிட்டுள்ளது என இதன் மூலம் அறிவிப்பு அளிக்கப்படுகிறது.
M/s.சுப்ரீம் கோட்டட் போர்ட் பிரைவேட் லிமிடெட்-ன் பங்குதாரர்கள் தங்களது உரிமை கோரல்களுக்கு ஆதாரங்களை 08.03.2023 அன்று அல்லது அதற்கு முன்பாக வ.எண்.10-ல் குறிப்பிட்டுள்ள கலைப்பாளரின் முகவரியில் சமர்ப்பிக்குமாறு இதன் மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
நிதி கடன் வழங்கியவர்கள் தங்களது உரிமை கோரிக்கைக்கான ஆதாரங்களை மின்னணு மூலமாக மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். அனைத்து பிற பங்குதாரர்கள் தங்களது உரிமை கோரலுக்கான ஆதாரங்களை நேரிலோ, அஞ்சல் வழியாகவோ அல்லது மின்னனு வழியாகவோ சமர்ப்பிக்கலாம்.
"வ.எண்.3-ன்கீழ் சம்பந்தப்பட்ட படிவங்களை (திவாலாநிலை மற்றும் திவால்நிலை போர்ட் ஆப் இந்தியா (கலைப்பு செயல்முறை) விதிமுறைகள், 2016-ன் படிவங்கள்) https://ibbi.gov.in/en/home/downloads-ல் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.
கிளைம்கள் பெற தவறான அல்லது தவறான ஆதாரங்களை சமர்பித்தால் அபராதம் விதிக்கப்படும்.
லிக்விடேட்டர் பெயர் : **ராஜலஷ்மி வரதராஜன்**
நாள் மற்றும் இடம் : 09.02.2023

படிவம் G
விருப்பம் தெரிவிக்க கோருதலுக்கான அழைப்பு
கோஸ்டல் எனர்ஜென் பிரைவேட் லிமிடெட்
தமிழ்நாடு, தூத்துக்குடியில் மின்துறையில் இயங்கி வருகிறது
(திவாலாநிலை மற்றும் திவால்நிலைகுழு ஆப் இந்தியா (நிறுவனங்களின் கலைப்பு செயல்முறை) விதிமுறைகள், 2016-ன் ஒழுங்குமுறை 36A(1)-ன்கீழ்)

தொடர்புடைய விபரங்கள்

1.	நிறுவன கடன்தாரர் பெயர் அத்துடன் CIN	**கோஸ்டல் எனர்ஜென் பிரைவேட் லிமிடெட் CIN : U40102TN2006PTC060009**
2.	பதிவு அலுவலகம் முகவரி	7வது தளம், புஹாரி டவர்ஸ் 4, மூர்ஸ் சாலை, சென்னை - 600006.
3.	இணையதளத்தின் URL	http://www.coastalenergen.com/
4.	பெரும்பாலான நிலையான சொத்துக்கள் அமைந்துள்ள இடத்தின் விவரங்கள்	இந்நிறுவனம் சொந்தமான அனல்மின் நிலையம் நடத்தி வரும் இடம் : 4/36டி, துரைசாமிபுரம் அஞ்சல், மேலமருதூர், ஒட்டப்பிடாரம் தாலுகா, தூத்துக்குடி, தமிழ்நாடு-628105 மற்றும் அவர்களின் கார்ப்பரேட்/பதிவு அலுவலகம் வ.எண்.2-ல் வழங்கப்பட்டுள்ளது.
5.	பிரதான தயாரிப்புகள்/சேவைகளின் நிறுவப்பட்ட திறன்	அனல்மின் நிலையம் (அடிப்படையில் வெளிநாட்டிலிருந்து இயக்குமதி, உள்நாட்டு நிலக்கரியும் பயன்படுத்தலாம்) திறன் - 600 MW x 2
6.	கடந்த நிதியாண்டில் விற்பனை செய்யப்பட்ட பிரதான தயாரிப்புகள்/ சர்வீஸ்களின் அளவு மற்றும் மதிப்பு	விவங்கள் F.Y. 2021-22 (தணிக்கை செய்யப்பட்டது) மில்களின் எண்ணிக்கை - 1,134.75 MUs வருவாய் - இந்திய ரூபாயில் 913.06 கோடி
7.	பணியாளர்கள்/வேலையாட்கள் எண்ணிக்கை	மொத்த ஊதிய பணியாட்கள் : 67 (வெளியிடப்படும் நாளன்று) நிறுவனமானது தூத்துக்குடியில் ஆலையை இயக்குவதற்கும் பராமரிப்பதற்கும் மூன்றாம் தரப்பு ஒப்பந்ததாரருடன் விரிவான ஒப்பந்தம் செய்துள்ளது.
8.	இரண்டு வருடங்களின் கடைசியாக கிடைக்கப்பெற்ற நிதிநிலை அறிக்கைகள் (அட்டவணைகளுடன்), கடன்தாரர் பட்டியல், செயல்முறையின் அடுத்தடுத்த நிகழ்வு-களுக்கான தொடர்புடைய தேதிகள் உள்ளிட்ட கூடுதல் விவரங்கள் இங்கே கிடைக்கும்	தேவையான விவங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன **http://www.coastalenergen.com/cirp.html** -ல் கிடைக்கும் மாற்றாக **cirp.coastal@gmail.com** மின்னஞ்சல் மூலமாகவும் விவரங்களை பெறலாம்.
9.	பிரிவு 25(2)(h) ன்கீழ் தகுதியான தீர்வு விண்ணப்பதாரர்களுக்கான தகுதி குறியீடு கிடைப்பது	தகுதியானவர்கள் மற்றும் விருப்ப வெளிப்பாடு விவரங்கள் பின்வரும் இணைப்பு மூலம் பெறலாம்: **http://www.coastalenergen.com/cirp.html** மாற்றாக **cirp.coastal@gmail.com** மின்னஞ்சல் மூலமாகவும் விவரங்களை பெறலாம்.
10.	விருப்ப வெளிபாடு கோருதல் பெறுவதற்கான கடைசி தேதி	**25.02.2023**
11.	வருங்கால தீர்மான விண்ணப்பதாரர்களின் தற்காலிக பட்டியல் வெளியிடப்பட்ட தேதி	**07.03.2023**
12.	தற்காலிக பட்டியலில் ஆட்சேபனைகளை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி	**12.03.2023**
13.	EOI சமர்ப்பிக்க செயல் மின்னஞ்சல் ID	**cirp.coastal@gmail.com**

திரு. ராதாகிருஷ்ணன் தர்மராஜன்
கோஸ்டர் எனர்ஜென் பிரைவேட் லிமிடெட்-க்கான தீர்மான வல்லுநர்
IBBI/IPA-001/IP-P00349/2017-18/10650
பதிவு எண். : IBBI/IPA-001/IP-P00508/2017-2018/10909
நாள் : 10.02.2023 **முகவரி :** எண்.31, கிருஷ்ணா 1வது அவென்யூ, 100 அடி சாலை, அசோக் நகர், சென்னை- 600083, தமிழ்நாடு.
இடம் : சென்னை

பஜாஜ் ஹௌசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பொது அறிக்கை

கிளை அலுவலகம் மூடல்

பஜாஜ் ஆட்டோ லிமிடெட் காம்ப்ளெக்ஸ், மும்பை-புனே சாலை, ஆகுர்தி, புனே 411035 என்ற முகவரியில் பதிவு செய்யப்பட்ட அலுவலகமும் செரிப்ரம் ஐடி பார்க், பி2 பில்டிங்க், 5-த் ஃப்ளோர், குமார் சிட்டி, கல்யாணி நகர், புனே 411014 என்ற முகவரியில் கார்ப்பரேட் அலுவலகமும் கொண்டுள்ள பஜாஜ் ஹௌசிங் ஃபைனான்ஸ் லிமிடெட், தனது வாடிக்கையாளர்களுக்கும் தொடர்புடையோருக்கும் 30, 2-வது ஃப்ளோர், அண்ணா சாலை, சின்னமலை, மேற்கு சைதாப்பேட்டை, சென்னை, தமிழ்நாடு 600015 என்ற முகவரியில் இயங்கும் அலுவலகம், 11/05/2023 முதல் மூடப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறோம்.

பஜாஜ் ஹௌசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்
செரிப்ரம் ஐடி பார்க், பி2 பில்டிங்க், 5-வது ஃப்ளோர்,
குமார் சிட்டி, கல்யாணி நகர்
புனே 411014, மஹாராஷ்ட்ரா
தொலைபேசி : 8698010101

BAJAJ FINSERV

Rane ராானே பிரேக் லைனிங் லிமிடெட்
Expanding Horizons
பதிவு அலுவலகம் : "மைத்ரி", 132, கதீட்ரல் சாலை, சென்னை - 600 086.
Visit us at: www.ranegroup.com CIN No.L63011TN2004PLC054948

டிசம்பர் 31, 2022 முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதத்திற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை அறிக்கை

ரூபாய் கோடிகளில்

வ எண்	விபரங்கள்	காலாண்டு முடிவுகள் 31.12.2022 தணிக்கை செய்யப்படாதது	காலாண்டு முடிவுகள் 31.12.2021 தணிக்கை செய்யப்படாதது	ஒன்பது மாத முடிவுகள் 31.12.2022 தணிக்கை செய்யப்படாதது	ஒன்பது மாத முடிவுகள் 31.12.2021 தணிக்கை செய்யப்படாதது
1.	இயக்கத்திலிருந்து மொத்த வருமானம் (net)	154.63	137.15	441.24	361.24
2.	இந்தக் காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரி மற்றும் விதிவிலக்கான இனங்களுக்கு முன்)	12.30	8.24	28.84	18.98
3.	இந்தக் காலத்திற்கான வரிக்கு முன் நிகர லாபம் / (நஷ்டம்) (விதிவிலக்கான இனங்களுக்கு பின்)	12.30	8.24	28.84	18.98
4.	இந்தக் காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) வரி மற்றும் (விதிவிலக்கான இனங்களுக்கு பின்)	9.17	6.87	21.44	14.01
5.	இந்தக் காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (இந்தக் காலத்திற்கான உள்ளடக்கிய லாபம் / (நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் விரிவான வருமானம் (வரிக்கு பின்)	9.16	7.06	21.49	13.05
6.	பங்கு மூலதனம்	7.73	7.73	7.73	7.73
7.	பங்கு ஒன்றுக்கு வருமானம் (EPS) (ரூ.10/- வீதம்)				
	(அ) அடிப்படை:	11.87	8.88	27.74	18.12
	(ஆ) நீர்த்த மதிப்பு:	11.87	8.88	27.74	18.12

குறிப்புகள்:
1. மேலே உள்ளது 2015-ஆம் வருடத்திய SEBI அமைப்பின் ஒழுங்குமுறை விதிகளின், ஒழுங்குமுறை விதி 33-ன் கீழ் (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) பங்குச் சந்தைகளில் தாக்கல் செய்யப்பட்ட, தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் எடுப்பகுதி ஆகும். இந்த தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் முழு வடிவம் பங்குச் சந்தைகளின் இணையதளங்களான www.bseindia.com and www.nseindia.com மற்றும் நிறுவனத்தின் இணையதளமான www.ranegroup.com என்ற முகவரியில் கிடைக்கும்.
2. பிப்ரவரி 09, 2023 அன்று நடைபெற்ற கூட்டங்களில், மேற்கூறிய நிதி முடிவுகள் தணிக்கைக் குழுவால் மதிப்பாய்வு மற்றும் பரிந்துரை செய்யப்பட்டு, அதன் பிறகு ரானே பிரேக் லைனிங் லிமிடெட் (நிறுவனம்) இயக்குநர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்டது. சட்டப்பூர்வ தணிக்கையாளர்கள் டிசம்பர் 31, 2022 இல் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதத்திற்கான வரையறுக்கப்பட்ட மதிப்பாய்வை மேற்கொண்டுள்ளனர்.
3. சொத்துக்களின் சுமந்து செல்லும் தொகை, மூலதனம் மற்றும் நிதி ஆதாரங்கள், லாபத்தன்மை, பணப்புழக்கம், உள் நிதிக் கட்டுப்பாடுகள் முதலியனவற்றில் கோவிட்-19 தொற்றுநோயின் தொடர்ச்சியான விளைவால் ஏற்படும் சாத்தியமான விளைவுகளை நிறுவனம் பரிசீலித்துள்ளது. நிறுவனமானது, சாத்தியமான எதிர்கால நிச்சயமற்ற தன்மைகள் தொடர்பான அனுமானங்களை வளர்ப்பதில், இந்த நிதி முடிவுகளின் ஒப்புதலின் தேதியில் உள்ளக மற்றும் வெளிப்புற தகவல் ஆதாரங்களைப் பயன்படுத்தியது மற்றும் தற்போதைய மதிப்பீடுகளின் அடிப்படையில் இந்த சொத்துக்களின் சுமந்து செல்லும் தொகை மீட்கப்படும் என்று எதிர்பார்க்கிறது. நிதி முடிவுகளில் கோவிட்-19 இன் தாக்கம், எதிர்காலத்தில் உருவாகக்கூடிய சூழ்நிலைகளைப் பொறுத்து, இந்த நிதி முடிவுகளின் ஒப்புதல் தேதியில் மதிப்பிடப்பட்டதில் இருந்து வேறுபடலாம், எதிர்காலப் பொருளாதார நிலைமைகளில் ஏதேனும் பொருள் மாற்றங்களை நிறுவனம் தொடர்ந்து உன்னிப்பாகக் கண்காணிக்கும்.

இடம் : சென்னை
தேதி : பிப்ரவரி 09, 2023

ரானே பிரேக் லைனிங் லிமிடெடிற்காக
எல் கணேஷ்,
தலைவர்

FEDERAL BANK

தி பெடரல் பேங்க் லிமிடெட்
பதிவு அலுவலகம்: ஆல்வாய், கேரளா
LCRD / சென்னை டிவிசன்: முதல் தளம், எண்.57, ராயப்பேட்டை நெடுஞ்சாலை, E P F அலுவலகம் அருகில், சென்னை-600014. Ph: 044 - 2813 1373, 2813 0988

விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 (விதி 8(6) சேர்த்துவாசிக்கவும்) பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6)-ன்கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை விற்பனை செய்தல்.

பெடரல் பேங்க்-ல் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்துக்களை பெடரல் பேங்க்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் **நேரடி சுவாதீனத்தில்** எடுக்கப்பட்டு **கடன் பெற்றவர்களான 1.Sri.S.ஷியாம்ராஜ்,** S/o Late K P K சங்கரன் நம்பியார், **2.Smt. சுனிதா ரவீந்திரன்,** W/o.S.ஷியாம்ராஜ், **இருவரது வசிக்கும் முகவரி:** எண்.12/28, ஒலிம்பிக் காலனி 2வது மெயின் ரோடு, அண்ணா நகர் மேற்கு, முகப்பேர், சென்னை 600 050. **3.Sri.ராஜேஷ் நாயர்,** S/o.ராமசந்திரன் நாயர், **4.Smt.மினி S நாயர்,** W/o.ராஜேஷ் நாயர், **இருவரது வசிக்கும் முகவரி:** 4/14/1, அரிஹண்ட் மெஜஸ்டிக் டவர்ஸ், ஜவஹர்லால் நேரு சாலை, கோயம்பேடு, சென்னை 600 107 ஆகியோரிடமிருந்து வரவேண்டிய வீட்டுக் கடன் **கணக்கு எண். 13247300010685-ன்** கீழ் செலுத்த வேண்டிய **03.08.2020** அன்றுள்ளபடி ரூ.**2,45,13,038.30** (ரூபாய் இரண்டு கோடியே நாற்பத்து ஐந்து லட்சத்து பதிமூன்றாயிரத்து முப்பத்து எட்டு மற்றும் பைசா முப்பது மட்டும்) (இந்த தொகை 02.08.2020 வரை வட்டியுடன்) மற்றும் 04.08.2020 முதல் திரும்ப செலுத்தும் காலம்வரை மாதாந்திர இருப்பின் மீது ஆண்டிற்கு 11.80% வட்டி, கட்டணங்கள், இதர செலவுகளை (04.08.2020 அன்று DRT-2, சென்னையில் தாக்கல் செய்யப்பட்ட OA படி) வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் **"உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு"** மற்றும் **"எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"** என்ற அடிப்படையில் **15.03.2023 அன்று விற்பனை செய்யப்படும்** என இதன் மூலம் பொதுமக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்கள் / சக-கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

சொத்தின் குறைந்தபட்ச கேட்பு விலை: ரூ.2,71,00,000/- (ரூபாய் இரண்டு கோடியே எழுபத்தோரு லட்சம் மட்டும்) மற்றும்
டேவணித்தொகை: ரூ.27,10,000/- (ரூபாய் இருபத்தேழு லட்சத்து பத்தாயிரம் மட்டும்)

அசையா சொத்து விபரம்
(தெரிந்த வில்லங்கங்கள் எதுவும் இருப்பின், அவற்றுடன்)

வட சென்னை பதிவு மாவட்டம் மற்றும் அம்பத்தூர் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட சர்வே எண்.149, முகப்பேர் கிராமம், அம்பத்தூர் தாலுகா, திருவள்ளூர் மாவட்டம், **கதவு எண்.12/28, 'கைலாஷ்', 2வது மெயின் ரோடு, ஒலிம்பிக் காலனி, முகப்பேர், சென்னை - 600 050 என்னும் முகவரியிலுள்ள 2400 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். அளவுகள்: கிழக்கு மேற்காக இரண்டு பக்கமும் 40 அடி, வடக்கு தெற்காக இரண்டு பக்கமும் 60 அடி. எல்லைகள்: வடக்கு: 2வது மெயின் ரோடு, தெற்கு: சர்வே எண்.151 பகுதியில் உள்ள கட்டிடம், கிழக்கு: ரவி-க்கு சொந்தமான சொத்து, மேற்கு: ரகுநாதன்-க்கு சொந்தமான சொத்து. ஷியாம் ராஜ் சங்கரன் பெயரில் அம்பத்தூர் சார் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட 03.02.2016 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திர எண்.461/2016-ல் விவரிக்கப்பட்டுள்ளபடி.

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு பெடரல் பேங்க் லிமிடெட்-ன் இணையத்தளத்தில் இணைக்கப்பட்டுள்ள இணைப்பை பார்க்கவும் அதாவது; https://federalbank.co.in/web/guest/tender-notices

இடம்: சென்னை
தேதி: 08.02.2023

தி ஃபெடரல் பேங்க் லிமிடெட்
(SARFAESI Act கீழ் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி)

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859-860, Anna Salai, Chennai 600002 on behalf of KSL MEDIA LIMITED, and Printed by D.Rajkumar at THG PUBLISHING PVT.LTD. Plot B-6 & B-7, CMDA Industrial Complex, Maraimalai Nagar, Chengleput Taluk, Kancheepuram Dist.Pin: 603209, Editor: K Asokan (Editor responsible for selection of news under the PRB Act).

CH-KP